**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 23/2020**

**Prosecution witness : அ.சா.91** **Date : 14.05.2025.**

| | |
|---|---|
| **Name : கலைமணி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 6, 7, 9, 15, 16, 20, 24, 27, 32, 33, 34, 35, 38, 44 present. )**

**(Accused 2, 8, 18, 19, 21, 24, 25, 26, 29, 30 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேட்டூர் காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சி 106 ராமசாமி என்பவர் இறந்துபோய்விட்டார். அவர் மேட்டூரில் வேலை செய்த போது கேன்சர் நோய் காரணமாக இறந்துவிட்டார். இவ்வழக்கில் சாட்சி 95 காவல் ஆய்வாளர் கிருஷ்ணன் அவர்கள் பணி ஓய்வு பெற்ற பிறகு வயது மூப்பு காரணமாக இறந்துபோய்விட்டார். இவ்வழக்கில் சாட்சி 96 முனியப்பன் என்பவர் விபத்து காரணமாக தலையில் காயமடைந்து தற்போது மன நிலை பாதிக்கப்பட்டு வெளியில் நடமாட முடியாத நிலையில் உள்ளார் என்பது எனக்கு நேரடியாக தெரியும். கடந்த 2007 ம் வருடம் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்த போது TN 27 G 1113 வாகன ஓட்டுநராக பணிபுரிந்தேன். கருமலைக்கூடல் குற்ற எண்.179/2007, 304(ஏ) இதச வழக்கில் இறந்துபோன மகேந்திரன் என்பவரின் பிரேதத்தை சேலம் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி அவரது பெற்றோர்களிடம் ஒப்படைத்துவிட்டு மேச்சேரி அருகே வந்து கொண்டிருந்த போது காவல் ஆய்வாளர் அவர்களுக்கு போன் வந்தது.

2) ராமன் நகர் அருகே இறந்து போன மகேந்திரன் என்பவரின் பிரேதத்தை வைத்து சாலை மறியல் செய்ததாக தகவல் வந்தது. மேட்டூருக்கு வரும் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த வாகனங்களை கடந்து வந்து ராமன் நகர் I.O.B வங்கி அருகில் இறந்து போன மகேந்திரன் கொண்டு வந்த ஆம்புலன்ஸ் ரோட்டின் குறுக்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ரோட்டில் கல் வைக்கப்பட்டிருந்தது.

3) இருபுறமும் 100 க்கும் மேற்பட்ட வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. வெற்றிவேல், பிரபாகரன், சுரேஷ்குமார், செல்வம் ஆகியோர் கூச்சலிட்டுக்கொண்டிருந்தனர். காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் சம்பவயிடம் வந்தார். வெற்றிவேல், பிரபாகரன், சுரேஷ்குமார், செல்வம் ஆகியோருடன் பேசியும் பலன் கிடைக்கவில்லை. தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பி.என்.பட்டி வி.ஏ.ஓ மற்றும் அவரது உதவியாளர் உடன் இருந்தனர்.

4) வருவாய் ஆட்சியர் தேவைப்பட்டதால் போன் மூலம் தகவல் தெரிவித்து இரவு 08.30 மணிக்கு துணை ஆட்சியர், வட்டாட்சியர் ஆகியோர் வந்தனர். 08.35 மணிக்கு கோட்டாட்சியர் அவர்களும், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களும் வந்திருந்தனர். கோட்டாட்சியர், வட்டாட்சியர் அவர்களும் வெற்றிவேல், பிரபாகரன், சுரேஷ்குமார், செல்வம் ஆகியோரிடம் பிரேதத்தை அப்புறப்படுத்துமாறும் வேண்டுகோள் விடுத்தனர். வெற்றிவேல் மகேந்திரன் இறந்ததற்கு காவல் துறை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததை படித்து காட்டுமாறு கோட்டாட்சியரிடம் முறையிட்டார்.

5) அவரும் வெற்றிவேல் அருகிலிருந்தவர்களிடம் ஆய்வாளர் அவர்களிடம் முதல் தகவல் அறிக்கை பெற்று படித்து காண்பித்தார். அதற்கு வெற்றிவேல் இறந்த மகேந்திரன் பிரேதத்திற்கு 10,00,000/- ரூபாய் நிவாரண தொகையாகவும், ஆசிரியர்களை சஸ்பெண்ட் செய்யவும் அவரது குடும்பத்திற்கு அரசு வேலை வேண்டுமென்றும் கூறினார். கோட்டாட்சியர், வட்டாட்சியர் அவர்கள் பல முறை அவரிடம் பேசியும் கலைந்து செல்ல மறுத்துவிட்டனர்.

6) மகேந்திரன் பிரேதத்தை ஏன் மேட்டூர் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யவில்லை, சேலம் அரசு மருத்துவமனையில் பரிசோதித்தீர்கள் என்று கூச்சலிட்டனர். அதற்கு காவல் ஆய்வாளர், துணை காவல் காண்காணிப்பாளர் அவர்கள் இருவரும் இது மாதிரி பிரச்சனை உள்ள பிரேதங்கள் சேலம் அரசு மருத்துவமனையில் சீனியர் மருத்துவர் முன்பு பிரேத பரிசோதனை செய்ய வேண்டுமென்று கூறினார். அதற்கு டிராபிக் அதிகமானதால் கருப்பு ரெட்டியூர் பக்கம் டிராபிக் திருப்பி விட்டதாக கூறினார்.

7) வெற்றிவேல் அவர்கள் போன் மூலம் வாகனங்களை அடித்து நொறுக்கவும், திருப்பி விடும் காவல் துறை மீது கல்லெடுத்து அடியுங்கள் என்று கூறினார். அருகிலிருக்கும் காவல் துறை வாகனங்கள் மீது TN 27 G 1113 வாகனத்தின் மீது அருகிலிருந்த கல்லை எடுத்து இடது புறமாக அடித்ததால் காயம் ஏற்பட்டு சைடு மிரர் உடைந்தது. மற்றும் TN 27 G 1459 காவல் வாகனமும், வட்டாட்சியர் வாகனம் TN 30 G 0064 வாகனமும் சேதமடைந்தது. இதனால் கட்டுக்கு அடங்காமல் போனது. வட்டாட்சியர் அவர்களின் உத்தரவுப்படி குறைந்தபட்ச பலபிரயோகம் செய்ய 11.50 முதல் 12.00 மணி வரை லேசான தடி அடி நடத்தினர்.

8) கூட்டம் கலைந்து சென்றதும் போக்குவரத்து சீர் செய்யப்பட்டது. பள்ளியில் இறந்த மகேந்திரன் பிரேதத்தை வைத்து வெற்றிவேல், சுரேஷ்குமார், செல்வம் ஆகியோர் சட்ட ஒழுங்கு சீர் குலைத்தனர். அவர்களுடன் சேர்ந்த கருமலைக்கூடல், ராமன் நகர் பகுதியை சேர்ந்த நபர்கள் சாலை மறியலில் ஈடுபட்டார்கள். சம்பவ சமயத்தில் நான் அடையாளம் பார்த்தேன். தற்போது நினைவில்லை. காவல் ஆய்வாளர் 13.06.2007 ம் தேதி என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

9) இந்த வழக்கில் நான் சீர்குலைத்ததாக சொல்லப்படும் வெற்றிவேல், சுரேஷ்குமார் இருவரும் சென்னை உயர் நீதிமன்றத்தால் இவ்வழக்கிலிருந்து நீக்கப்பட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆஜரிலுள்ள எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்களா என்றால் தற்போது நினைவில்லை. நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம்

நடைபெறவில்லை என்றும் நான் காவல் துறையினர் சார்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 23/2020**

**Prosecution witness : அ.சா.92** **Date : 14.05.2025.**

| | |
|---|---|
| **Name : செம்மலை** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 6, 7, 9, 15, 16, 20, 24, 27, 32, 33, 34, 35, 38, 44 present. )**

**(Accused 2, 8, 18, 19, 21, 24, 25, 26, 29, 30 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சேலம் மாவட்ட ஆயுத படையில் தலைமை காவலராக பணிபுரிகின்றேன். கடந்த 11.06.2007 ம் தேதியன்று ஆயுதப்படை காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவுப்படி TN 27 G 1459 வாகனத்தில் காவல் ஆளினர்களை ஏற்றிக் கொண்டு சட்டம் ஒழுங்கு பிரச்சனை காரணமாக சேலம் மாவட்ட ஆயுத படையிலிருந்து கருமலைக்கூடல் D.S.P அய்யா அவர்களிடம் அறிக்கை செய்ய வந்தோம். வரும் வழியில் குஞ்சாண்டியூரில் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது. நாங்கள் அதை கடந்து கருமலைக்கூடல் செல்லும் வழியில் I.O.B வங்கி அருகில் D.S.P அய்யா அவர்களிடம் அறிக்கை செய்தோம்.

2) அப்போது ராமன் நகர் பஸ் நிறுத்தம் அருகே சுமார் 300 பேர் ரோட்டில் ஒரு சிறுவனின் உடலை வைத்துக் கொண்டு ஆம்புலன்ஸை குறுக்காக நிறுத்தி கற்களை வைத்துக் கொண்டிருந்தார்கள்.அப்போது சிலர் கலெக்டர் வரனும், C.E.O வரனும் என்று சொல்லியும் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். காவல் துறையும், வருவாய் துறையும் எவ்வளவு கூறியும் அவர்கள் கலைந்து செல்லவில்லை.

3) எங்களுக்கு ரூ.10,00,000/- வேண்டுமென்று கோஷமிட்டார்கள். அந்த கூட்டத்திலிருந்த சிலர் கற்களை எடுத்து காவல் துறை வாகனத்தின் மீதும்,

போலீசாரின் மீதும் வீசினார்கள். அதில் நான் இயக்கி வந்த TN 27 G 1459 வாகனத்தின் முன் பக்க கண்ணாடியும், முகப்பு விளக்கும் சேதமடைந்தது. அதன் பிறகு போலீசார் தாசில்தார் அவர்களின் உத்தரவுப்படி லேசான தடியடி நடத்தி கூட்டத்தை கலைத்தார்கள். சிறுவனின் உடலை பாதுகாப்போடு அடக்கம் செய்ய கொண்டு சென்றார்கள். அதன் பிறகு 12.06.2007 ம் தேதியன்று கருமலைக்கூடல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவுப்படி வாகனம் MVI காட்டுவதற்காக போக்குவரத்து ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வுக்காக காண்பித்து பொறியாளரை நியமித்து சேதமதிப்பு கணக்கிடப்பட்டது. பிறகு வாகனம் ஆயுதப்படைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சம்பவ சமயத்தில் ஈடுபட்ட எதிரிகளை சம்பவ சமயத்தில் நான் அடையாளம் பார்த்தேன். தற்போது நினைவில்லை. அரசு வாகனங்களுக்கு சேதம் ஏற்படுத்தியதை நான் நேரடியாக பார்த்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

4)யார் யார் எந்தெந்த வாகனத்தின் மீது கல்லை வீசி சேதம் ஏற்படுத்தினார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் TN 27 G 1459, TN 27 G 1113, TN 27 S 2005 ஆம்புலன்ஸ் ஆகியவற்றை அடையாளம் தெரிந்த நபர்கள் தாக்கி சேதப்படுத்தினார்கள். நான் சேலம் பகுதியில் வேலை செய்து வந்ததாலும், சம்பவ சமயத்தில் பாதுகாப்பு பணிக்காக வந்த சமயத்தில் சேதம் ஏற்படுத்திய நபர்கள் செயல்பட்டதை மட்டும் என்னால் நினைவு படுத்தி சொல்ல இயலும்.

5) சம்பவ சமயத்தில் அவர்களை பார்த்ததால் தற்போது பல ஆண்டுகள் ஆனதால் நினைவு படுத்த இயலவில்லை. எனது பணி அந்த சமயத்தில் பாதுகாப்பு பணி என்றால் ஆமாம். அவ்வாறு சேதம் ஏற்படுத்திய நபர்களை நான் தடுக்க எனக்கு உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றால் தடுத்தேன். காவல் வாகனத்தை அடித்து நொறுக்கினார்கள் என்றால் நாலா பக்கமும் தாக்கியதால் என்னால் குறிப்பிட்டு நபர்களை பற்றி சொல்ல முடியாது. என் முன்பாக சம்பவம் முடிந்த பிறகு அடையாள அணிவகுப்பு ஏதேனும் நடத்தினார்களா என்றால் இல்லை. அரசு சொத்திற்கு வழக்கில் குறிப்பிட்ட எதிரிகள் தான் சேதம் ஏற்படுத்தினார்கள்

என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் விசாரணையில் தெரிய வந்தது. என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் அவ்வாறு குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் காவல் துறை சார்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 23/2020**

**Prosecution witness : அ.சா.93** **Date : 14.05.2025.**

| | |
|---|---|
| **Name : எமரால்டு எம்.வெங்கடாசலம்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 6, 7, 9, 15, 16, 20, 24, 27, 32, 33, 34, 35, 38, 44 present. )**

**(Accused 2, 8, 18, 19, 21, 24, 25, 26, 29, 30 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது குஞ்சாண்டியூரில் குடியிருந்து முழுநேர அரசியல் வாதியாக உள்ளேன். கடந்த 11.06.2007ம் தேதியன்று குஞ்சாண்டியூர் மற்றும் ராமன் நகர் பகுதியில் நான் மேட்டூரிலிருந்து ராமன் நகர் நோக்கி சென்று கொண்டிருந்த சமயத்தில் ராமன் நகரில் பொது மக்கள் கும்பலாக இருந்தார்கள். நான் அவர்களை பற்றி விசாரித்த போது பொது மக்கள் சாலையில் பிணத்தை வைத்து அரசு அதிகாரிகள் அங்கு வரவேண்டுமென்று சொல்லி ஆர்பாட்டம் செய்தார்கள்.

2) நான் பொதுமக்களிடம் ஏன் இவ்வாறு பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்ட போது ஒரு பள்ளியில் படித்த மாணவன் இருவருக்கும் இடையே தகராறு நடந்து மகேந்திரன் என்பவர் இறந்து விட்டதாகவும் எனவே இழப்பீடு கேட்டு பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள். நான் வேறு வேலை காரணமாக அந்த பகுதியிலிருந்து சென்றுவிட்டேன். பிறகு அரசு வாகனங்கள் பிரச்சனை செய்தவர்கள் சேதம் ஏற்படுத்தியதாக தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

3) அரசு வாகனங்கள் மீது கல்லெறிந்ததாகவோ, சேதம் விளைவித்ததாகவோ எனக்கு எதுவும் தெரியாது என்றால் ஆமாம். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. கூட்டமாக இருந்தவர்கள் என்ன காரணத்திற்காக பிணத்தை வைத்து

பிரச்சனை செய்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் ஆமாம். கூட்டமாக இருந்ததை மட்டுமே பார்த்தேன். பிறகு நான் அங்கிருந்து சென்றுவிட்டேன் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நடுவர் எண்.2
மேட்டூர்.